பக்கங்கள் 16

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 02 செவ்வாய்க்கிழமை 16.01.2024 அதிர்வு 169

## ஐஸ் போதைப்பொருளுடன் சிக்கிய பொலிஸ் அதிகாரி

ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொழும்பு வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மிஹிஜய செவன பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும்

04 ▶




### நாடு தழுவிய பணிப்புறக்கணிப்பால்

# அத்தியாவசிய சுகாதார சேவைகளை வழங்கக் களமிறங்கியது இராணுவம்

**வைத்தியர்கள் நீங்கலாக 72 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்கள் நாடளாவிய ரீதியில் இன்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். இந்நிலையில், அத்தியாவசிய சுகாதார சேவைகளுக்கு உதவுவதற்காக இலங்கை இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளது.**

04 ▶





# மட்டக்களப்பு பண்ணையாளர்கள் 'கறுப்புப் பொங்கல்' போராட்டம்!

### சுமந்திரன், சாணக்கியனும் பங்கேற்பு






மட்டக்களப்பு, மயிலத்தமடு – மாதவனைப் பண்ணையாளர்கள் மற்றும் விவசாய அமைப்புக்கள் ஒன்றிணைந்து இன்று நூதனப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இன்றைய மாட்டுப் பொங்கலைக் கறுப்புப் பொங்கல் எனப் பெயரிட்டு அமைதி வழியில் போராட்டமாகவும் மற்றும் நடை பவனியாகவும் அவர்கள் தங்கள் எதிர்ப்பை காட்டியுள்ளனர்.

மயிலத்தமடு, மாதவனைப் பகுதிகளில் மாடுகள் ஆக்கிரமிப்பாளர்களால் வதைக்க வதைக்க ஈவு இரக்கம் இன்றி கொல்லப்படுவதும் காயப்படுவதும் தொடர்ந்த வண்ணமுள்ளது.

இதற்கு எதிராகப் பண்ணையாளர்கள் முன்னெடுத்து வரும் போராட்டம் 120 நாட்களையும் தாண்டியுள்ள போதிலும் தீர்வு கிடைக்கவில்லை.

இந்நிலையில், இன்றைய மாட்டுப் பொங்கலைக் கறுப்புப் பொங்கல்

04 ▶



### வவுனியா வைத்தியசாலை ஊழியர்களின்

# பணிப்புறக்கணிப்பால் நோயாளர்கள் அவதி!

**(கி.வசந்தரூபன்)**

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை சிற்றூழியர்கள், பாமசியாளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் பல்வேறு கோரிக்கைளை முன்வைத்து இன்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பள அதிகரிப்பு , ஊழியர் பற்றாக் குறையை உடன் நிவர்த்தி செய், வாழ்வாதாரத்தை அதிகரி போன்ற கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 11ஆம் திகதி பணிப்புறக்கணிப்பில் (சுகயீன விடுமுறை) ஈடுபட்டிருந்த போதிலும் அதற்கு எவ்வித தீர்வும் கிடைக்கப் பெறாத நிலையில் வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் இன்று (சுகயீன விடுமுறை) பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை முழுவதும் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந்நிலையிலேயே வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையிலும் அவசர நோயாளர் பிரிவு, நோயாளர் விடுதி , விபத்துப் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு உட்பட்ட சில சேவைகளில் மட்டுப்படுப்பட்ட சிற்றூழியர்கள் சேவைகள் ஈடுபடுவதுடன் வெளிநோயாளர் பிரிவு , கிளினிக் பிரிவு, ஸ்கானிங், கதிர் பிரிவு, கதிரியக்கப் பிரிவு போன்ற ஏனைய சேவைகளிலிருந்து சிற்றூழியர்கள், பாமசியாளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் முற்றாக 24 மணிநேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டம் காரணமாக கிளினிக், வெளிநோயாளர் பிரிவு, மருந்தகப் பிரிவ ஆகியவற்றுக்கு வரும் நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.
















# யாழில் நீதி அமைச்சர் தலைமையில்
# தேசிய நல்லிணக்கக் கலந்துரையாடல்

**(பிரபாகரன் டிலக்சன்)**

தேசிய நல்லிணக்க அமைச்சின் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபையினுடைய அலுவலகத்தில் இன்று நடைபெற்றது

காலை 10 மணியளவில் யாழ். கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபை அலுவலகக் கேட்போர் கூடத்தில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் தேசிய நல்லிணக்க அமைச்சின் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது நாடளாவிய ரீதியில் தேசிய நல்லிணக்கத்தைத் தொடர்ந்தும் கட்டியெழுப்புதல் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இந்த நிகழ்வில் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன, தேசிய நல்லிணக்க சமூக வாழ்வு நல்வாழ்வு அலுவலகப் பிரதானி திருமதி துசாரி சூரியராச்சி, பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் கிருஷாந்த பத்திராஜ, யாழ். மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன், யாழ். மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், வவுனியா பல்கலைக்கழகத்தின் வேந்தர் எஸ்.மோகனதாஸ், திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.











# நிழல் உலக தாதா பூகுடு கண்ணாவின் சகாவே மட்டக்குளியில் சுட்டுக்கொலை



கொழும்பு, மட்டக்குளி பகுதியில் நேற்றிரவு சுட்டுக்கொலை செய்யப்பட்ட நபர் பாதாளக் குழுவுடன் தொடர்புடையவர் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தியாவில் தலைமறைவாகியுள்ளார் எனக் கூறப்படும் பாதாளக் குழு உறுப்பினர் பூகுடு கண்ணாவின் உதவியாளராக இவர் செயற்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

கொழும்பு, மட்டக்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரந்திய உயன தொடர் மாடி குடியிருப்புக்கு அருகில் நேற்றிரவு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

ஓட்டோவில் இருந்த இருவரே துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த 40 வயதுடைய நபர் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

'படா ரஞ்சி' என அழைக்கப்படும் செந்தில் ஆறுமுகன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பாதாளக் குழுக்களுக்கிடையிலான மோதலின் விளைவாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## மின்சாரம் தாக்கி

### மாணவன் சாவு!

மாணவர் ஒருவர் மின்சாரம் தாக்கப்பட்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மாத்தளை, ரத்தோட்டை , கம்மடுவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மாத்தளை – கம்மடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயது மாணவனாவார்.

இவர் பாடசாலையில் உள்ள இளநீர் மரத்தில் இளநீர் பறிப்பதற்காக ஏறியுள்ளார்.

இந்நிலையில், இளநீரை இலகுவாகப் பறிப்பதற்காக மற்றொரு மாணவன் மூங்கில் மரக்கிளை ஒன்றை குறித்த மாணவனிடம் கொடுத்துள்ளார்.

குறித்த மூங்கில் மரக்கிளை அருகில் இருந்த மின் கம்பத்தில் பட்டதில் மரத்தில் இருந்த மாணவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளளார் என்று கம்மடுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### ஆசிரியர் மாரணம்

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாமஸ்டன் தோட்டத்தில், மின்சாரம் தாக்கி ஆசிரியர் ஒருவர் பலியாகியுள்ளார்.

பாமஸ்டன் தமிழ் வித்தியாலயத்தில் சேவையாற்றும் இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இன்று காலை அவர் தனது வீட்டு தோட்டத்துக்குச் சென்றுள்ளார். தோட்டத்துக்கு பாதுகாப்பு வேலி மற்றும் நீர் பாய்ச்சுவதற்காக பொருத்தப்பட்டிருந்த மின் இணைப்பில் ஏற்பட்டிருந்த கசிவை அவதானிக்காது, கால் வைத்ததால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மட்டக்களப்பு...**

எனப் பெயரிட்டு அவர்கள் நூதனப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இந்தப் போரட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா. சாணக்கியன் மற்றும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், சமூக அமைப்புக்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**அத்தியாவசிய...**

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவின் வழிகாட்டுதலின் பேரில் பாதுகாப்பு அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க படையினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று இலங்கை இராணுவம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இன்று அத்தியாவசிய சுகாதார சேவைகள் தடையின்றி வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக நாடு முழுவதும் உள்ள பல்வேறு அரசு வைத்தியசாலைகளில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை, கண்டி பொது வைத்தியசாலை, களுபோவில போதனா வைத்தியசாலை, பேராதனை போதனா வைத்தியசாலை, மாத்தளை மாவட்ட வைத்தியசாலை, குருநாகல் போதனா வைத்தியசாலை மற்றும் மொனராஹல, நுவரெலியா, பதுளை, அம்பாந்தோட்டை, பலாங்கொடை, திஸ்ஸமஹார, தெபரவெவ உள்ளிட்ட பல அரச வைத்தியசாலைகளில் இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

அந்தந்தப் பாதுகாப்புப் படைத் தளபதிகளின் மேற்பார்வையின் கீழ், இராணுவப் பணியாளர்கள் இந்த வைத்தியசாலைகளில் உதவி வழங்குவதற்கும், சுகாதாரச் சேவைகள் இடையூறுகள் இல்லாமல் தொடர்வதை உறுதி செய்வதற்கும் தீவிரமாக நிறுத்தப்பட்டுள்ளனர். அவசர காலங்களில் மேலதிக படை-களை அனுப்புவதற்கு இராணுவம் தயார் நிலையில் உள்ளன.

வைத்தியர்கள் நீங்கலாக 72 தொழிற் சங்கங்களைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்கள் இன்று காலை 6.30 மணிக்கு 24 மணி நேர வேலைநிறுத் தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

வைத்தியர்களுக்கான சேவைக்கால இடையூறு, வருகை மற்றும் போக்குவரத்துக் கொடுப்பனவை 35,000 ரூபாவால் அதிகரிக்கவுள்ளதாக நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அமைச்சரவைக்கு அறிவித்திருந்தார்.

இந்தத் தீர்மானத்துக்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதுடன், குறித்த கொடுப்பனவு தமக்கும் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி பல சுகாதார தொழிற்சங்கங்கள் இன்று பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளன.

**ஐஸ் போதைப்பொருளுடன்...**

27 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் சந்தேகநபர் மோதரை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார் என்று கொழும்பு வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.





## “எங்களை பட்டினி போட வேண்டாம்; எங்களைத் தொட வேண்டாம்”

# திருமலையில் இன்று மாட்டுப் பொங்கல்!

(அப்துல்சலாம் யாசீம்)

“எங்களை பட்டினி போட வேண்டாம். எங்களைத் தொட வேண்டாம்” என்ற பதாதைகளை மாட்டில் தொங்கவிட்டவாறு இன்று (16) திருகோணமலையில் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்பட்டது.

திருகோணமலை மாவட்ட காந்தி சேவை சங்கத்தால் இந்த மாட்டுப் பொங்கல் கன்னியா பகுதியிலுள்ள பட்டியொன்றில் கொண்டாடப்பட்டது.

மிருக வதையை தடுப்போம், அரசியல் செய்து ஆண்டவனின் ஆசிர்வாதத்தை இழக்காதீர்கள், உங்களுக்கு உணவளிக்கும் எங்களை பாதுகாப்பது மனிதர் உங்களது கடமையாகும், எங்களது உணவை மறுப்பது உரிமை மீறலாகும் என்ற பதாதைகள் எழுதப்பட்ட பதாதை ஒன்றும் மாட்டுப் பட்டிக்கு அருகில் தொங்கவிடப்பட்டிருந்தது.

கன்னியா அகத்தியர் ஆதீனம் தம்பிரானால் பூசை முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் திருகோணமலை முன்னாள் நகர சபை உறுப்பினர் இலிங்க ராசா (சிங்கம்) மற்றும் திருவண்ணாமலை மாவட்ட சாந்தி சேவை சங்கத்தினர், சிவில் சமூக அமைப்பினர், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.








# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மருத்துவத் துறையில் தொற்றுக் கிருமிகள்

நாடு முழுவதிலும் அரச சுகாதார ஊழியர்கள் இன்று முன்னெடுத்த வேலை நிறுத்தப் போராட்டத்தினால் நாட்டில் மருத்துவ, சுகாதார சேவைகள் முடங்கின. பல ஆஸ்பத்திரிகள் இயங்கவில்லை. நோயாளர்கள் பட்ட அவலம் சொல்லுந்தர மன்று.

சுகாதாரப் பிரிவுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தொழிற்சங்கங்கள் பொது மக்களின் உயிரையும் நலனையும் பணயம் வைத்து இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருக்கின்றன.

மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடையூறு மற்றும் போக்குவரத்து உதவித் தொகை மருத்துவர்களல்லாத சுகாதார தொழிற்சங்கங்களையும் சேர்ந்த தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தி இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர் அந்தத் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்கள்.

துணை மருத்துவர்கள் மற்றும் துணை சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்கள் கடந்த வாரத்தில் முன்னெடுத்து வந்த அடையாள வேலை நிறுத்த போராட்டங்களின் தொடராகவே இன்று இந்த மருத்துவத்துறை செயலிழப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு இருக்கின்றது.

நாடு டெங்குத் தாக்கத்தினால் கதிகலங்கி இருக்கும் இச்சமயத்தில், நோயாளர்களின் உயிரைப் பணயம் வைக்கும் இந்த நடவடிக்கையை கூட்டுத் தொழிற்சங்க உரிமை என்ற பெயரில் முன்னெடுத்திருக்கின்றனர் மருத்துவர்களல்லாத சுகாதார ஊழியர்கள்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் சுகாதாரத்துறை ஊழியர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வேலைநிறுத்தப் போராட்டம் நியாயமற்றது என முத்திரை குத்தி, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இவ்விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. மேற்படி சுகாதார ஊழியர்களின் போராட்டத்தை மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடுமையாக விமர்சித்திருக்கின்றது.

மறுபுறத்தில், பரவலான இந்த வேலை நிறுத்தத்தில் பங்கேற்பதைத் தவிர்த்துள்ள இலங்கைத் தாதியர் சங்கம், வேலை நிறுத்த நாளில் மதிய உணவு நேரத்தில் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு முன்பாக ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கின்றது.

எப்படிப் பார்த்தாலும் நாடு மிக மோசமான இக்கட்டில் சிக்கியிருப்பது தெளிவு.

அதல பாதாளத்தில் விழுந்து கிடக்கும் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தா விட்டால் இந்த நாட்டில் மக்கள் வாழவே முடியாத நிலைமை ஏற்பட்டு விடும்.

அத்தோடு நாட்டில் தினசரி சராசரியாக 400 டெங்கு தொற்றார்கள் புதிது புதிதாக இனம் காணப்படும் பேரவல நிலைமை ஏற்பட்டுள்ளது.

டெங்கு நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தவும், தொற்றுக்கு இலக்கானோருக்கு சிகிச்சை அளிக்கவும் இயலாமல் நாடே தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

இச்சமயத்தில் மக்களின் உயிர் காக்கும் உன்னத சேவைக்குத் தங்களை அர்ப்பணிப்பவர்களாகச் சத்தியப்பிரமாணம் செய்து, அதன் பெயரில் ஊதியம் பெற்று வரும் தரப்பினர், நாட்டையும் மக்களையும் சுகாதாரத் துறையையும் பேரவலத்தில் மாட்ட வைக்கும் தொழிற்சங்கப் போராட்டம் என்ற கிருமித்தனமான வேலையை, சமய சந்தர்ப்பமே பார்க்காமல் அற்பத்தனமாக செய்து கொண்டிருக்கின்றனர்.

ஒன்றில் வேலை நிறுத்தம் அல்லது சட்டப்படி வேலை நிறுத்தம் என்ற பெயர்களில் சுகாதார சேவைகளை சீர்குலைப்பார்கள். அல்லது தங்களுக்கு இருக்கும் அனுபவங்களை, பட்டம், பதவிகளை, வசதி வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, நாட்டையும் மக்களையும் அம்போ என்று தவிக்க விட்டு விட்டு வெளிநாடுகளுக்கு ஓடித் தப்புவார்கள்.

தெய்வீக சேவையான மருத்துவத்துறையை சத்திய பிரமாணம் செய்து வரித்துக்கொண்ட நமது நாட்டின் மருத்துவர்கள் உட்பட சுகாதார சேவையினரின் மிக மோசமான பண்பியல்பு இதுதான்.

பொது நலன், நாட்டு நலன், நாட்டின் இன்றைய நிலைமை குறித்தெல்லாம் அவர்களுக்கு சிந்தனையும் இல்லை, கரிசனையும் இல்லை, பொறுப்பும் இல்லை.

மருத்துவத்துறை மிக மிக அத்தியாவசிய சேவை என்பதைப் புரிந்து கொண்டுள்ள இத்தரப்பினர் தொழிற்சங்க உரிமைகளைப் பயன்படுத்தி ஒன்று சேர்ந்து அல்லது அதனைக் கொண்டு மக்களின் சுகாதார, மருத்துவ சேவைகளை பணயம் வைத்து மிகவும் அற்பத்தனமாக நடந்து கொள்கிறார்கள். படித்தவர்கள் - உயர்ந்தவர்கள் - சமூக வழிகாட்டிகள் - மக்களின் உயிர் காக்கும் தெய்வங்கள் - என்றெல்லாம் போற்றப்படும் மருத்துவர்கள்தான் இந்தக் கேவலமான போக்கில் முன்னணியில் நிற்பவர்கள்.

மக்களையும் நாட்டையும் அரசையும் அச்சுறுத்தி அடிபணிய வைக்கும் இத்தகைய மாஃபியாக்கள் ஒழிக்கப்பட வேண்டும். அடியோடு அடக்கி ஒடுக்கப்பட வேண்டும்.

மருத்துவத் துறையை செயலிழக்கச் செய்யும் போராட்டங்களை பெருந்தொற்று கிருமிகளை அழித்து அடக்குவது போல அடக்குவது காலத்தின் கட்டாயமாகும்.



## ‘வீதியை புனரமைத்து தாருங்கள்’ எனக் கோரி

# தங்கள் ஒரு நாள் சம்பளத்தை ஆளுநருக்கு அனுப்பி மீசாலை மக்கள் நூதன கோரிக்கை!

(எஸ்.நிதர்ஸன், ந.லோகதயாளன் )

தென்மராட்சி – கொடிகாமம் பகுதியில் உள்ள வீதி ஒன்றைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை முன்வைத்துள்ள அந்தப் பகுதி மக்கள், புனரமைப்புப் பணிகளுக்குச் செலவிட என்று ஒரு தொகை பணத்தையும் வடமாகாண ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

கொடிகாமம் – மீசாலை வடக்கு இராமாவில் பகுதியில் உள்ள தட்டாங்குளம் பிள்ளையார் வீதியை புனரமைக்குமாறு கோரியே அந்தப் பகுதி மக்கள் இவ்வாறானதொரு நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

அவர்கள் அனுப்பிவைத்துள்ள கோரிக்கைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

தென்மராட்சிப் பிரதேச செயலர’ பிரிவில் ஜே–320 மற்றும் ஜே – 321 ஆகிய கிராம சேவகர் பிரிவுக்கு நடுவே அமைந்துள்ள தட்டாங்குளம் பிள்ளையார் வீதியை இரு கிராம சேவகர் பிரிவுகளிலும் உள்ள மக்கள் பயன்படுத்துகின்றனர்.

இது தவிர இந்த இரு கிராம சேவகர் பிரிவில் உள்ள மற்றும் அயல் கிராமங்களில் உள்ள சுமார் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் வீரசிங்கம் மத்திய கல்லூரி, வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை ஆகியவற்றுக்குச் செல்வதற்காக பயன்படுத்துகின்றனர்.

பயணிக்கவே முடியாத நிலையில் பொரிய குழிகளுடன் இவ்வீதி காணப்படுகிறது. இவ்வாறான பாரிய குழிகளால் மழை காலங்களில் அதிக விபத்துக்களும் நடைபெறுகின்றன. கடந்த 18 வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாமல் காணப்படும் இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு சகல தரப்பினரிடம் பல கோரிக்கைகள் முன்வைத்துள்ளோம்.

இருப்பினும் இது வரை எந்தவிதமான புனரமைப்புக் கூட செய்யப்படாமல் பயன்படுத்தவே முடியாத வீதியாக எமது வீதி மாற்றமடைந்து வருகின்றது.

நாளுக்கு நாள் மிக மோசமான வீதியாக மாறி வரும் இவ்வீதியை உடனடியாகப் புனரமைத்துத் தர வேண்டும் என்று கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

இவ்வீதி புனரமைப்புக்காக எமது பகுதியில் வசிக்கும் ஒவ்வொருவரிடமும் இருந்து அவர்களின் ஒரு நாள் வேதனமான (ஆயிரம் ரூபாவை) சேகரித்து வங்கியூடாக சுமார் 96 ஆயிரம் ரூபாவைக் காசோலையாக அனுப்பி வைத்துள்ளோம்.

அந்தப் பணத்தையும் புனரமைப்பு பணிகளுக்கான செலவு நிதியில் சேர்த்துக் கொள்வதோடு, வீதியின் புனரமைப்பு பணிகளை துரித கதியில் முன்னெடுக்குமாறு கோரிக்கை முன்வைக்கின்றோம்.– என்றுள்ளது.

இந்த வீதி புனரமைப்புத் தொடர்பான கோரிக்கை கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்த்தன, யாழ். மாவட்ட அரச அதிபர், சாவகச்சேரி பிரதேச செயலர், கொடிகாமம் பிரதேச சபை செயலாளர் உள்ளிட்டோருக்க அப்பகுதி மக்களால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# மன்னாரில் கட்டாக்காலி எருமைகளால் பயன் தரும் பயிர்கள் நாசமாக்கப்பட்டன

(மன்னார் நிருபர்)

மன்னார் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பல்வேறு கிராமங்களில் கட்டாக்காலி எருமை மாடுகளின் நடமாட்டம் அண்மைக் காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றன. இவற்றால் பயன் தரும் பயிர்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதான பாலம் ஊடக மன்னார் நகரப் பகுதிக்கு கூட்டமாக வருகை தரும் எருமை மாடுகள் ஜிம்றோன் நகர், எழுத்தூர், எமில் நகர், சாந்திபுரம் உட்பட பல்வேறு கிராமங்களுக்குள் சென்று மக்களின் வீடுகளின் சுற்று வேலிகளை சேதப்படுத்துகின்றன. வீட்டிலு் உள்ள தென்னை மரம் உள்ளடங்களாக பயன் தரும் பயிர்களை அழிக்கின்றன.

அதுமட்டுமன்றி வீதியால் செல்லும் மக்களையும் தாக்குகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மன்னார் நகர சபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ள போதும் மன்னார் நகர சபை இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கை மேற்கொண்டு எருமை மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும், மன்னார் பகுதியில் வருகை தந்துள்ள கட்டாக்காலி எருமை மாடுகளை உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# ஹொக்கித் தடிகள் அன்பளிப்பு

காரைதீவு ஹொக்கி லயன்ஸ் கழகத்துக்கு ‘அஸ்கோ’ அமைப்பினர் ஒரு தொகுதி ஹொக்கித் தடிகளை வழங்கியுள்ளனர்.

கழகத்தின் தலைவர் தவராசா லவன் தலைமையில் கழகத்தின் வருடாந்த ஒன்று கூடல் இடம்பெற்ற போது இவை வழங்கப்பட்டுள்ளன.

காரைதீவு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதிதிகளாக கழக போசகர் வி.ரி. சகாதேவராஜா, அமைப்பின் செயலாளர் ச. நந்தகுமார், பொருளாளர் ம. சுந்தரராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். கடந்த வருடம் மாகாண மட்டத்தில் சாதனை நிலைநாட்டிய மைக்காகச் சான்றிதழ்கள் கழக வீரர்களுக்கு வழங்கப்பட்டன.

# அம்பாறைக்கு நிவாரண உதவிகள்; ஹரீஸ் எம்.பி. பல்வேறு நடவடிக்கை!



(நூருல் ஹுதா உமர்)

நாட்டின் சீரற்ற காலநிலை காரண மாகப் பாதிக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட மக்களுக்குப் பல்வேறு நிவாரண உதவிகளை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரீஸ் மேற்கொண்டுள்ளார்.

அதன் தொடர்ச்சியாக ஒலுவில், அட்டாளைச்சேனை பிரதேசத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் வெள்ள நிலைமைகளையும் நேரடியாகப் பார்வையிட்டார்.

ஒலுவில் பிரதேச மக்களுக்கான சமைத்த உணவு வழங்கும் ஏற்பாடுகளை ஒலுவில் ஜும்மா பள்ளிவாசல் ஊடாகவும், அட்டாளைச்சேனை மக்களுக்கான சமைத்து உணவு வழங்கும் ஏற்பாடுகளை அட்டாளைச்சேனை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழு ஊடாகவும் முன்னெடுத்தார்.

அம்பாறை அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரமவைச் சந்தித்து இடைத் தங்கல் முகாமில் உள்ள மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதில் உள்ள நெருக்கடி நிலைகள், நிவாரண உதவி வழங்குதல், வெள்ளத்தில் மூழ்கியுள்ள மக்களை பாதுகாப்பான முறையில் தங்க வைத்தல், போக்குவரத்தில் மாற்று ஒழுங்குகளை செய்தல் போன்ற பல்வேறு விடயங்களை ஆராய்ந்தார். துரிதகதியில் நிவாரண பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடினார்.

ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுடன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரண பணிக்கு தேவையான நிதி ஏற்பாடுகளை அம்பாறை மாவட்டத்துக்கு அவசரமாக வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.



# திருகோணமலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பத்தினிபுர மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மழை வெள்ளத்தால் பாதிக்கபட்ட திருகோணமலை தம்பலகாமம் கோட்டத்தில் உள்ள பத்தினிபுர மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலர் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தம்பலகாமக் கோட்டக் கிளை தலைவர் விஜயகுமார் ஆகியோரது வேண்டுகோளுக்கு இணங்க திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த உலர் உணவுப் பொருள்களை திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் தலைவர் சண்முகம் குகதாசன் மற்றும் செயலாளர் கணபதிப்பிள்ளை சிவானந்தன் ஆகியோர் வழங்கினர்.

இதன் போது பிரதேச செயலர் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தம்பலகாம கோட்டத் தலைவர் விஜய்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# சிவானந்தா பாடசாலைக்கு கதிரைகள் வழங்கி வைப்பு!

(பழுவூரான்)

சிவானந்தா தேசிய பாடசாலை பழைய மாணவர் சங்கத்தால் சிவானந்தா பாடசாலை ஒன்று கூடல் தேவைக்கென 250 கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன.

சிவானந்தா பழைய மாணவர் சங்கத் தலைவரும், மண்முனை வடக்குப் பிரதேச செயலருமான வி.வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர் சங்கத்தால் பாடசாலை நிர்வாகத்திடம் 250 கதிரைகள் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

இதன்போது பாடசாலை அதிபர் எஸ்.தயாபரன், பிரதி அதிபர் த.குலேந்திரகுமார், உதவி அதிபர் எஸ்.மணிவண்ணன், பழைய மாணவர் சங்க செயலாளரும், கணக்காளருமான பி.குணராஜா மற்றும் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# மருத்துவர்களுக்கு 35 ஆயிரம் ரூபா சம்பளம் அதிகரிப்பு உண்மையா?

## அது வெறும் கண்துடைப்பு நாடகம்



டாக்டர் முரளி வல்லிபுரநாதன்

அண்மையில் அரசாங்க சேவையில் உள்ள மருத்துவர்களின் சம்பளம் 35 ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து ஏனைய சுகாதார தொழில் சங்கங்கள் தமக்கும் 35 ஆயிரம் அதிகரிப்பு தரவேண்டும்




என இரண்டு நாள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டமையும், அதன்பின்னர் இப்போது மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிப்பதாக அறிவித்துள்ள நிலையில் இது தொடர்பான உண்மை நிலையை ஆராய்வதே இந்த கட்டுரையின் நோக்கம் ஆகும்.

ஊழலினால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கு பின்னர் பதவிக்கு வந்த அரசியல் தலைமைகள் சர்வதேச நாணய நிதிய பரிந்துரை என்ற பெயரில் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் மாத சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்களின் மீது அதிகரித்த வரி விதித்த நிலையில், அரசாங்க மருத்துவர்களின் சம்பளத்தில் சராசரியாக 35 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமான தொகை வரியாகக் கழிக்கப்பட்டது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் குறைந்தளவு சம்பளம் பெறும் மருத்துவர்கள், சம்பளம் குறைக்கப்பட்ட இந்தச் செயலால் அதிருப்தி அடைந்து ஆயிரக்கணக்கில் நாட்டை விட்டு வெளியேற தொடங்கினார்கள்.

இதனால் பல வைத்தியசாலைகள் செயலிழந்துள்ள நிலையில் கலக்கமடைந்த ஆட்சியாளர்கள் இதை ஈடு செய்ய- அதாவது அண்மைக்கால வரிவிதிப்புக்கு முன்னர் இருந்த நிலைக்கு வைத்தியர்களது சம்பளமாகப் பெறும் தொகையினை கொண்டு வருவதற்கு 35 ஆயிரம் ரூபாவை வழங்கத் தீர்மானித்து விட்டு அதை தான் 35 ஆயிரம் ரூபாவினால் மருத்துவர்களின் சம்பளம் அதிகரிப்பதாக கண்துடைப்பு செய்கிறார்கள்.

உண்மையில் இது சம்பள அதிகரிப்பு அல்ல.

உதாரணமாக ஒரு மருத்துவ நிபுணரின் சம்பளம் வரியினால் 40 ஆயிரம் ரூபாயினால் குறைக்கப்பட்டு இருந்தது. இப்போது 35 ஆயிரம் ரூபா வருமான அதிகரிப்பு என்று கூறிக்கொண்டு மேலும் வரிவிதிப்பை மொத்த சம்பளத்தில் அதிகரிப்பார்கள். இதனால் உண்மையான அதிகரிக்கும் அளவு 25 ஆயிரமாக இருந்தாலும் வரி விதிப்புக்கு முன்னர் இருந்ததை விட அவர் இன்னும் 15 ஆயிரம் ரூபா குறைவாகவே பெறுவார்.

இதேவேளை வரிவிதிப்புக்கு உட்படாத சம்பளத்தை பெறும் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் (ஆடுவ) மற்றும் போராட்டத்தில் ஈடுபடும் ஏனைய தொழில் சங்க உறுப்பினர்கள் உயர்தரத்தில் 3 பாடம் சித்தியுடன் 1 அல்லது 2 வருடத்துக்கு மேற்படாத மாதாந்தக் கொடுப்பனவுடன் கூடிய சுகாதார திணைக்கள பயிற்சி நெறிகளை முடித்துவிட்டு தமது பணி நியமனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இடைநிலை சுகாதார ஊழியர்களான இவர்கள் தங்களை தாங்களே சுகாதார நிபுணர்கள் என்று அழைத்துக் கொண்டு, உயர்தரத்தில் சிரமப்பட்டு படித்து அதிகளவு புள்ளிகளை பெற்று எதுவித மாதாந்தக் கொடுப்பனவுகளும் இன்றி 5 வருடம் மருத்துவ பீட அடிப்படைக் கற்கைகளை நிறைவுசெய்த பின்னர் முத வருடம் உள்ளகப் பயிற்சி பெற்று வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள மருத்துவர்களுக்கு சமனாக, வரிக்கு உட்படாத தமது சம்பளத்தையும் 35 ஆயிரம் ரூபாயினால் அதிகரிக்குமாறு கேட்பது எப்படி நியாயம் ஆகும்?

மேலும் நாடு வெள்ள அனர்த்தம் மற்றும் டெங்கு பரவல் காரணமாக ஒரு பேரழிவை எதிர்நோக்கும் நேரத்தில் இவ்வாறான அநியாயக் கோரிக்கைகளை முன்வைத்து போராடுவது சுகாதார ஊழியர்களின் ஒழுக்க நெறிக்கு பொருத்தமானதா?

இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, அனைத்து ஊழியருக்கும் அதிகரித்த சம்பளத்தை வழங்குவதை நியாயப்படுத்தி உள்ளது. ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரையான அரசசெலவினங்களை குறைப்பது என்பது பொருளாதாரத்தில் முன்னேறி வரும் ஏனைய நாடுகளை போல பாதுகாப்பு செலவீனங்களை குறைப்பது மூலமாக அடையப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பாதீட்டில் அண்ணளவாக 50 வீதச் செலவை பாதுகாப்புக்கு ஒதுக்கிவிட்டு அதை சரிக் கட்டுவதற்கு அரச ஊழியர்களின் மீதான வரியை அதிகரிப்பது அவ தந்திரமாகும்.

வைத்தியர்களுக்கு வழங்கப்பட்டது போல சம்பள உயர்வு தமக்கு வழங்க வேண்டும் என்று கேட்கும் தொழிற்சங்கங்கள் கூட பாதுகாப்பு செலவை குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வெளிப்படுத்தவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

அரச ஊழியர்களை செலவுகளை குறைத்து சிக்கனமாக இருக்க உபதேசிக்கும் அரசியல்வாதிகள் தொடர்ந்தும் ஊழலில் ஈடுபட்டு அதிகரித்த செலவுகளை ஏற்படுத்துகிறார்கள். சில தினங்களுக்கு முன்னர் கூட மஹ்ந்த குழுவினர் வரி செலுத்துவோரின் பணத்தில் கப்பலில் பயணம் செய்து களியாட்டம் நடத்தினார்கள்

பாதுகாப்பு செலவை ஆட்சியாளர்கள் அதிகரித்த நிலையில் வைத்திருப்பதற்கு இலங்கை மீது அந்நிய நாடுகள் எதுவும் படை எடுக்கவில்லை. வல்லரசுகள் இலங்கை மீது படையெடுக்கத் தேவையுமில்லை. ஏனென்றால் இலங்கை மக்களை சுரண்டி வல்லரசுகளுக்கு வருமானம் தரக்கூடிய அனைத்து வியாபாரங்களுக்கும் ஒத்துழைக்க ஆட்சியாளர்கள் தயாராக இருக்கின்றனர்.

அப்படி இருந்தும் அதிகரித்த பாதுகாப்பு செலவு ஏன் ஏற்படுகிறது என்ற கேள்விக்கான பதிலை தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் குவித்து வைக்கப்பட்டுள்ள ஆயுதப்படையினர் மூலமாக அறிந்து கொள்ளலாம். கடந்த காலங்களில் இடம்பெற்ற, தவறுகளை நேர்மையாக ஏற்றுக் கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கி, இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, ஒன்றுபட்ட இலங்கைக்குள் கௌரவமான ஒரு தீர்வை வழங்குவதன் மூலமாகவே ஆயுதப்படையினரை அங்கிருந்து அகற்ற முடியும்.

எது,எப்படி இருந்தாலும் பாதுகாப்பு செலவினத்தைக் குறைப்பதாலும் ஊழல் மிக்க அரசியல்வாதிகளில் இருந்து நாட்டை மீட்டு எடுத்தால் மாத்திரமே வைத்தியர்களுக்கு கண் துடைப்புக்காக வழங்கிய தொகையை விட அதிக சம்பள அதிகரிப்பை பெற முடியும் என்பதை அனைத்து அரசாங்க தொழிற்சங்கங்களும் உணரவேண்டும். அந்த நிலை ஏற்படுவதற்கு உரிய அழுத்தத்தை அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து பிரயோகிப்பதே சகல இலங்கையர்களும் தத்தமது சம்பள உயர்வை பெற்றுக் கொள்ளவும் நாட்டை பொருளாதார சீரழிவில் இருந்து நிரந்தரமாக மீட்டெடுக்கவும் உதவும் சாத்தியமான வழியாகும்.



# சிவில் சமூக அமைப்புக்களின் ஒன்றியம் காத்தான்குடியில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடியியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் தொழில் வாண்மையாளர் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் ஒன்றியத்தின் அலுவலகம் காத்தான்குடியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சேர் ராசிக் பரீட் மாவத்தையில் அமைந்துள்ள கிரசன்ட் கல்வி நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைப்பின் தலைவர் யூ.எல் எம்.என். முபீன் உட்பட பணிப்பாளர் சபை மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது காத்தான்குடி மற்றும் அதனை அண்டிய மக்களின் இயல்பு வாழ்க்கையை மிக மோசமாக பாதிப்படையச் செய்த வெள்ளப் பெருக்குத் தொடர்பில் ஆராயப்பட்டது. இது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய மாற்றுத் திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

# சமூக சேவை திணைக்களத்தால் காரைதீவு மக்களுக்கு உதவிகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வெள்ள நிலைமை காரணமாக பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு சமூக சேவை திணைக்களத்தின் அனுசரணையுடன் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது அம்பாறை மாவட்ட மேலதிக செயலர் வீ.ஜெகதீசன் மற்றும் சமூக சேவை பணிப்பாளர், சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# மக்கள் பிரச்சினையை பிரதேச மட்டத்தில் தீர்ப்பதற்கு அம்பாறையில் பொலிஸ் குழு!

(எம்.ஏ.றமீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொலிஸ் உபதேச குழுக்களை ஒன்றிணைத்து ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட கலந்துரையாடல் கெப்சோ அமைப்பின் ஏற்பாட்டில் அம்பாறையில் இடம் பெற்றது. மக்கள் பிரச்சினைகளைப் பிரதேச மட்டத்தில் தீர்க்கும் நோக்கில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என்.ஜயபத்ம தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது, நிகழ்வின் பங்காளி அமைப்பான கெப்சோ நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளரும், உபதேசக் குழுவின் தவிசாளருமான ஏ.ஜே.காமில் இம்டாட், பொலிஸ் உயரதிகாரிகள், அம்பாறை மாவட்டத்தில் செயற்பட்டு வரும் பொலிஸ் உபதேசக் குழுக்களின் பிரதிநிதிகள், சமூகப் பொலிஸ் சேவைப் பிரிவின் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்த வருடத்தின் முதலாவது விஷேட மாவட்ட குழு கூட்டத்தின் போது அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ள திட்ட முன்மொழிவுகள் முன் வைக்கப்பட்டன. பொலிஸாரும் பொது மக்களும் இணைந்து இந்த மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.



அம்பாறை மாவட்டத்தில் உள்ள 23 பொலிஸ் நிலையங்களின் கீழ் செயற்பட்டு வரும் உபதேசக் குழுக்கள் மற்றும் பொலிஸார் போன்றோர் இணைந்து பிரதேச ரீதியாக காணப்படும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் போன்றவற்றைக் கண்டறிந்து தீர்த்து சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் வகையிலான வேலைத் திட்டத்தையும் நடைமுறைப் படுத்துதல் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

இதன்போது அம்பறை மாவட்டத்தில் உள்ள தீய பழக்கவழக்க செயற்பாட்டாளர்களை சீர்திருத்துதல், மக்கள் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கான செயன்முறையை மேற்கொள்ளல், மக்கள் நின்மதியாக வாழ்வதற்கான வழி வகைகளை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என்.ஜயபத்ம சுட்டிக் காட்டினார். இதற்கென அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# விவசாயிகள் மாநாடு ராகலையில்!

(மஸ்கெலியா நிருபர்)

அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் நுவரெலியா மாவட்ட மாநாடு அண்மையில் ராகலைகத் தோலிக்க கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

அகில இலங்கை விவசாய சம்மேள னத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன, தேசிய தொழிற்சங்க நிலையத்தின் தலைவர் கே. டி. தேசிய மக்கள் சக்தியின் லால்காந்த, தேசிய உறுப்பினர் மஞ்சுள சுரவீரராச்சி மற்றும் அகில இலங்கை விவசாயிகள் சம் மேளனத்தின் தேசிய நிறைவேற்று உறுப்பினர் ரஞ்சித் விஜேரத்ன ஆகியோரின் பங்குபற்றுதலுடன் விவசாயிகள் மாநாடு நடைபெற்றது.

நுவரெலியா மாவட்டத்தை பிரதி நிதித்துவப் படுத்தும் விவசாயிகள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.





# மூதூர் தோப்பூர் பிரதேசத்தில் நுளம்புக் களப் பரிசோதனை!

மூதூர் பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட தோப்பூர் பிரதேசத்தில் வீட்டுக்கு வீடு நுளம்பு களப் பரிசோதனை சுகாதார வைத்தியதிகாரி ஹில்மி முகைதீன் பாவா ஆலோசனையில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஐ.எம்.றினூஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது வீட்டின் உற்புறம் மற்றும் சுற்றுப் புறங்களில் நுளம்பு பெருகும் சாத்தியமான இடங்கள் அடையாளம் காணப்பட்டு வீட்டு உரிமையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

அநேக வீடுகளின் வீட்டின் உட்பகுதியில் அதிகமான நுளம்புக் குடம்பிகள் அவதானிக்கப்பட்டன. இதை அடுத்தும் வீட்டின் உரிமையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மூதூர் பொது சுகாதார வைத்தியதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரும் இணைந்து பரிசோதனையில் ஈடுபட்டனர்.

வீட்டுச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்கத் தவறும் பட்சத்தில் உரிமையாளருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன்போது பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





# சமூக சேவைகளில் தம்மை அர்ப்பணிக்கும் தொண்டர்களுக்கு மனித உரிமைப் பத்திரம்

(அஷ்ரப் ஏ சமத்)

சர்வதேச மனித உரிமைகள் குலோபல் மிஷன்ஸ் நிறுவனத்தால் சமூகத்தில் மனித உரிமைக்காகவும் சமூக சேவைகளில் தன்னை அர்ப்பணிக்கும் தொண்டர்களுக்கு மனித உரிமைப் பத்திரம் மற்றும் அடையாள அட்டை விருதுகள் வழங்கி கௌரவிப்பு நிகழ்வு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகச் சர்வதேச உலக பௌத்த மகா சம்மேளத்தின் தலைவர் கலாநிதி சுதத் தேவப்பெரும, நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, இந்த மனித உரிமை அமைப்பின் தலைவர் கலைஞர் அமீர்க்கான் , பணிப்பாளர் கே. குப்பரலிங்கம் மற்றும் ஆஸ்திரேலிய சட்டத்தரணி திரு திருமதி போல், பிரிகேடியர் சுரேஸ் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

50 இற்கும் மேற்பட்டோருக்கு மனித உரிமைப் பத்திரம், அடையாள அட்டை வழங்கப்பட்டன.







# பாலமுனை பாடசாலையில் சிரமதானம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

விடுமுறையின் பின் பாடசாலை ஆரம்பிக்கப்படுவதை முன்னிட்டு பாடசாலை அதிபர் ஏ. எல் .எம் பாயிஸ் தலைமையில், பிரதி அதிபர் ஐ.எம். பாஹிம், பொது சுகாதார பரிசோதகர் எம். மிஹியார் , பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் பங்களிப்புடன் சிரமதான அடிப்படையில் பாடசாலை வகுப்பறைகள், சுற்றாடல் என்பன சுத்தம் செய்யப்பட்டன.

இந்தப் பாடசாலை வெள்ள அனர்த் தத்தால் முழுமையாக பாதிக்கப்பட்டு பாடசாலையினுடைய வகுப்பறை கட்டடங்களுள்வெள்ள நீர் புகுந்து மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது.

பாடசாலையைச் சூழ வெள்ளம் உள்ள நிலையில் பாடசாலை வகுப் பறைகள் துப்புரவு செய்யப்பட்டுள் ளன.

# கிண்ணியாவில் மாதுளம்பழ செய்கை வெற்றியளித்தது!





(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வட்டமடு பகுதியில் மாதுளைச் செய்கை வெற்றியளித்துள்ளது.

மாதுளைச் செய்கையை பொது மக்கள் பார்வையிட்டு வருவதுடன் கொள்வனவிலும் ஈடுபட்டு வருகின்றனர். தனியார் ஒருவரின் முயற்சியால் இந்த மாதுளைச் செய்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது.

மக்கள் ஆர்வத்துடன் பார்வையிடு வதுடன் கொள்வனவிலும் ஈடுபடுகி றார்கள்.

மாதுளை தோட்டச் செய்கை கிண் ணியா வரலாற்றில் முதல் வெற்றியாக கருதப்படுகிறது. வட்டமடு பகுதியில் ஏனைய சேனைப் பயிர்ச் செய்கை பலராலும் மேற்கொள்ளப்பட்டாலும் விசேடமாக மாதுளை செய்கை ஒரு புது விதமான உற்பத்தி செய்கையாக பார்க்கப்படுகிறது. பல மருத்துவ நற்குணங்களை கொண்ட மாது ளைக்குப் பெரும் கிராக்கி காணப்படு கிறது.

மக்களின் பார்வையில் அதிக வரவேற்பைப் பெற்று விளங்குவதுடன் விசேடமாக அதிக பார்வையாளர்களைக் கிண்ணியா மாதுளை தோட்டம் ஈர்த்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

# “பாரதிய சனாதன பாரம்பரியத்தின் பிரகாசமான துறவி திருவள்ளுவர்”

## தமிழக ஆளுநரின் கருத்தால் சர்ச்சை



காவி உடையில் இருக்கும் திருவள்ளுவரின் உருவப்படத்தைப் பகிர்ந்து, அவரை சனாதன பாரம்பரியத்தின் பிரகாசமான துறவி என்று குறிப்பிட்டு சமூகவலைதளத்தில் கருத்தைப் பகிர்ந்து தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி சர்ச்சையைக் கிளப்பியுள்ளார்

திருவள்ளுவர் தினத்தை ஒட்டி தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி வெளியிட்ட சமூகவலைதளப் பதிவில்,

“திருவள்ளுவர் தினத்தில், ஆன்மிக பூமியான நமது தமிழ்நாட்டில் பிறந்த, மதிப்புக்குரிய கவிஞரும், சிறந்த தத்துவஞானியும், பாரதிய சனாதன பாரம்பரியத்தின் பிரகாசமான துறவியுமான திருவள்ளுவருக்கு எனது பணிவான அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலத்தால் அழிக்க இயலாத அவரது ஞானம் நமது தேசத்தின் சிந்தனை மற்றும அடையாளத்தை வடிவமைத்து, வளப்படுத்தி ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் வழிகாட்டியாகவும், உத்வேகத்தின் ஆதாரமாகவும் இருக்கிறது.

இந்தப் புனித நாளில் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது இந்த கருத்து தற்பொழுது தமிழகத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# “திருவள்ளுவரைப் பற்றிய அடிப்படை புரிதல் ஆளுநருக்கு இல்லை”: கனிமொழி கருத்து

திருக்குறள் மற்றும் திருவள்ளுவரைப் பற்றிய அடிப்படை புரிதல் ஆளுநருக்கு இல்லை என்றும் வள்ளுவரின் நிறம் மனிதநேயம்தான். வேண்டுமென்றால் வள்ளுவருக்கு கருப்பு நிறம் போடலாம் எனவும் ஆளுநரின் சர்ச்சைப் பேச்சுக்கு தி.மு.கவின் எம்.பி. கனிமொழி கருத்து தெரிவித்துள்ளார்.

திமுக எம்.பி. கனிமொழி சென்னையில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது பேசிய அவர், “மும்மொழிக் கொள்கைக்கான தேவை என்னவென்று கூறினால், அதை நாம் புரிந்து கொள்ள முடியும். தற்போது மும்மொழிக் கொள்கைக்கான தேவை எதுவுமே கிடையாது. நம்முடைய பாரம்பரியம், அடையாளம் தாய் மொழி தமிழ். மற்ற மொழியினரோடு பேசுவதற்கு ஆங்கில மொழி இருக்கிறது.

இதனால், ஆங்கிலம் படிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. மற்ற பகுதிகளில் வசிக்கக்கூடிய மக்களுடன் பேசுவதற்கு ஆங்கிலம் என்பது இணைப்பு மொழியாக உலகெங்கிலும் ஏற்றுக்



கொள்ளப்பட்டுள்ளது. இதனைத் தாண்டி மற்றொரு மொழி படிப்பது என்பது, அது அவரவருடைய விருப்பம். ஆனால் மும்மொழிக் கொள்கை என்பது அவசியம், என்பதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது.

திருக்குறள் மற்றும் திருவள்ளுவரைப் பற்றிய அடிப்படை புரிதல் ஆளுநருக்கு இல்லை. திருவள்ளுவரை ஒரு துறவி என யாருமே கூறியது கிடையாது. அவ ருக்கு திருமணம் ஆகி ஒரு மனைவி இருந்ததாகவும் கருத்து இருக்கிறது. இல்லறம் குறித்து அவரைப் போல கவித்துவமாக எழுதியிருப்பவர்கள் யாருமே இருக்க முடியாது.

திருக்குறளை படித்து புரிந்து கொள்ளக்கூடிய நாம் அவரை துறவியாக பார்த்ததே கிடையாது. திருக்குறளில் எந்த ஒரு மத அடையாளமும் கிடையாது. சனாதனம் உள்ளிட்ட வேறு எந்த மதத் தையுமே நாம் அவர் மீது திணிக்க முடியாது.

இதை அடிப்படையிலேயே புரிந்து கொள்ள வேண்டும். மதத்தை கடந்து மனிதத்தை பேசுவது தான் திருக்குறள். மனிதநேயத்துக்கு ஒரு நிறம் இருந்தால் அதுதான் திருவள்ளுவரின் நிறம். எனக்குத் தெரிந்து அடுத்த மனித நேயத்தின் அடையாளம் பெரியார். வேண்டுமென்றால் வள்ளுவருக்கு கருப்பு நிறம் போடலாம்” –என்றார்.

# டெல்லியில் அதிகரித்துள்ள பனிமூட்டம்!

டில்லியில் அதிகரித்திருக்கும் பனிமூட்டம் காரணமாக 30 இற்கும் மேற்பட்ட விமானங்கள் மற்றும் புகை யிரதங்கள் தாமதமாகியுள்ளன.

இந்தியாவின் வட மாநிலங்களில் நிலவும் கடும் பனிமூட்டம் காரணமாக மக்கள் பெரும் சிக்கலுக்குள்ளாகியுள் ளனர்.

டில்லியில் காலை வேளையில் 3.6 டிகிரிக்கும் குறைவான வெப்பநிலையே பதிவாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கடுமையான பனி மற்றும் குளிர் காரணமாக வட மாநிலங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

# ஜனாதிபதி தேர்தலில் இருந்து விவேக் ராமசாமி விலகல்

2024 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளரை தேர்வு செய்ய நடந்த அயோவா மாகாண தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவைத் தொடர்ந்து ஜனாதிபதி தேர்தலில் இருந்து விலகுவதாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் ராமசாரி இன்று அறிவித்தார்.

இது குறித்து அவர், “நான் இன்றிரவு இந்த உண்மையை ஏற்றுக் கொள்கிறேன். இது கடுமையாகவே இருக்கிறது. ஆனாலும் ஏற்கிறேன். இன்று மக்களை ஆச்சர்யப்படுத்தும் முடிவை எதிர்பார்த்தோம். அது கிட்டவில்லை” எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் பிரதான அரசியல் கட்சிகள் என்றால் ஜனநாயக கட்சி மற்றும் குடியரசு கட்சிகள்தான். ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பைடன் தற்போது அமெரிக்க ஜனாதிபதியாக உள்ளார். இந்த ஆண்டு அவரின் பதவிக் காலம் முடியவுள்ளதால் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடக்கவுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக



போட்டியிட விருப்பம் உள்ளவர்கள் கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெறவேண்டும். அதற்கு மாகாணங்கள் தோறும் வாக்குப்பதிவு நடைபெறும். இருக்கட்சிகள் சார்பிலும் நடக்கும் மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்ட தங்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை தேர்ந்தெடுப்பார்கள்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் களம் களைகட்டத் தொடங்கியுள்ளது. அந்த வகையில் குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் தேர்வு நடைபெற்று வருகிறது. முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வரும், தெற்கு கரோலினா மாகாண முன்னாள் ஆளுநருமான நிக்கி ஹேலி, தொழிலதிபர் விவேக் ராமசாமி உள்ளிட்டோர் களத்தில் இருந்தனர். இதில் அயோவா தேர்தல் மூலமாக ட்ரம்ப் தனது வெற்றிக் கணக்கைத் துவக்கியுள்ளார்.

அயோவா தேர்தலில் 51.9 சதவீத வாக்குகளுடன் டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து முன்னிலை வகிக்கிறார். ப்ளோரிடா ஆளுநர் ரான் டேசாண்டிஸ் 20.7 சதவீத வாக்குகளுடன் 2 ஆம் இடத்தில் இருக்கிறார். தெற்கு கரோலினா ஆளுநர் நிக்கி ஹேலி 19 சதவீத வாக்குகளுடன் மூன்றாம் இடத்தில் உள்ளார். விவேக் ராமசாமி 7.7 சதவீத வாக்குகளும், அர்கான்ஸஸ் முன்னாள் ஆளுநர் அஸா ஹட்ஷின்சன் 0.2 சதவீத வாக்குகளும் பெற்றுள்ளனர்.

இந்தப் பின்னடைவினைத் தொடர்ந்து ஜனாதிபதி தேர்தலில் இருந்து விலகுவதாக விவேக் ராமசாமி இன்று அறிவித்துள்ளார்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 38 வயதாகும் விவேக் ராமசாமி ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தில் உயிரியல் துறையில் பட்டம்பெற்ற அவர், தற்போது தொழில்முனைவோராக உள்ளார்.

# இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்து லண்டனில் பேரணி!

இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பிரித்தானியாவின் தலைநகரான லண்டனில் அண்மையில் மாபெரும் பேரணியொன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி ஹமாஸ் படையினரால் இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் 100 ஆவது நாளைக் குறிக்கும் வகையிலேயே அந்த பேரணி நடத்தப்பட்டுள்ளது.

சுமார் 1000 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட மேற்படி பேரணியில் இஸ்ரேலியக் கொடிகளை ஏந்திய வண்ணம் பேரணில் ஈடுபட்ட மக்கள், காஸாவுக்குப் பணயக்கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்குமாறும் வலியுறுத்தியுள்ளனர்.



இதேவேளை, அந்த பேரணியில் பயணக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டதாக நம்பப்படும் சுமார் 132 பேரின் படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஐஸ்லாந்தில் எரிமலை வெடிப்பு!

ஐரோப்பாவின் தீவு நாடான ஐஸ்லாந்தில் தெற்கு தீபகற்பம் கிராண்டாவிக் பகுதியில் உள்ள எரிமலை வெடித்துள்ளது. இதன் காரணமாக எரிமலையில் இருந்து லாவா குழம்பு வெளியேறி அந்தப் பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்துள்ளது.

இதனால் லாவா குழம்பு குடியிருப்பு பகுதிக்குள் சென்றதால் அங்கி ருந்த வீடுகள், கடைகள் உட்பட பல் வேறு கட்டடங்கள் அனைத்தும் தீக்கிரையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

